461

# விவசாயிகளிடையே நமது கட்சி



இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ்நாடு கமிட்டி
சென்னை-1

V2,4N24
N58
77675

# விவசாயிகளிடையே நமது கட்சி

தமிழாக்கம் :

**மணலி கந்தசாமி**

★

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ்நாடு கமிட்டி
சென்னை-1

முதல் பதிப்பு : டிசம்பர் 1958

விலை அணா 3

கிடைக்குமிடம் :

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,

199, மவுண்ட் ரோட்,

சென்னை-2

"நிலப்பிரச்சினையின் சில அம்சங்கள்" என்ற இச் சிறு பிரசுரம் 1958 அக்டோபரில் சென்னையில் கூடிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் கவுன்சில் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தஸ்தாவேஜாகும்.

நாடு சுதந்திரம் பெற்றபிறகு, காங்கிரஸ் சர்க்கார் கொண்டுவந்துள்ள சில நிலச்சட்டங்கள் காரணமாக, கிராமப்புறங்களில் ஏற்பட்டுவரும் பொருளாதார மாறுதல்களைப் பற்றி இந்த தஸ்தாவேஜு ஒரு சரியான கணிப்புக்கு வந்துள்ளது. எனவே இது மிக முக்கியம் வாய்ந்ததொன்றாகும். ஆளும் கட்சித் தலைவர்கள் நிலச்சீர்திருத்தம் பற்றியும், உணவுற்பத்திபற்றியும் வானளாவப் பேசி வருகிறார்கள். எனினும், அவர்கள் இதுகாறும் கொண்டுவந்துள்ள நிலச்சட்டங்கள், நிலப்பிரபுக்கள் முதலாளித்துவ நிலப்பிரபுக்களாக மாறுவதற்கே உதவியுள்ளன. கிராமப்புறங்களில் வல்லமைமிக்க பணக்கார விவசாயிகளையும் தோற்றுவிக்க ஒத்தாசை புரிந்துள்ளன. இச்சட்டங்கள் அமுலுக்கு வந்த பின்னரும் லட்சக்கணக்கான குத்தகை விவசாயிகள் நிலத்தைவிட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். விவசாயத் தொழிலாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

சீனாவின் உணவுற்பத்தியைப் பற்றி நமது ஆட்சியாளர்கள் பேசுகிறார்கள். அங்குள்ள விவசாய வளர்ச்சியைக் கண்டறிந்து வரத் தூதுக்குழுக்களை அனுப்புகிறார்கள். ஆனால், சீன சர்க்கார் கடைப்பிடித்துள்ள வழிகளை இங்குள்ள நிலைமைக்கேற்ப அனுஷ்டிக்க மறுக்கிறார்கள். நிலப்பிரபுத்துவத்துக்கு முடிவுகட்டி, நிலங்களை விவசாயிகளுக்கு வினியோகம் செய்து விவசாயிகளின் கடன்பளுவை அறவே துடைப்பதை சீன சர்க்கார் முதல் நடவடிக்கையாகக் கொண்டார்கள். இந்த நடவடிக்கைகளும் அவர்கள் கையாண்ட முறைகளும்தான் இன்று சீனாவின் முன்னேற்றத்திற்கு அடிகோலின.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு, நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் வழங்கி, அவர்களுடைய உற்சாகத்தையும், தனிமுயற்சியையும் அதிகரிப்பது அவசியம்

என்பது நமது ஆட்சியாளர்களுக்குப் படவில்லை. மாறாக, உணவுற்பத்திப் பெருக்கிற்கு பணக்கார விவசாயிகளேயும், முதலாளித்துவ நிலப்பிரபுக்களேயுமே அவர்கள் நம்பியிருக்கிறார்கள். உணவு நெருக்கடி இதனால், வளருகிறதே ஒழிய நீங்கியபாடில்லை.

விவசாய வளர்ச்சிக்கும், மக்களின் தேவைக்கான உணவு உற்பத்திப் பெருக்கிற்கும் இப்பிரசுரம் வழிகாட்டு காட்டுகிறது. நமது நாட்டின் நிலப்பிரச்சினை எவ்வாறு தீர்கப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காண்பிக்கிறது.

கிராமப் புறங்களில் விவசாய மக்களிடம் பணியாற்றும் ஊழியர்களுக்கும், நாட்டு விவசாயத்திலும், உணவு உற்பத்தியிலும் அக்கரை கொண்டுள்ள நல்லெண்ணம் படைத்த ஜனநாயகவாதிகளுக்கும், குறிப்பாகக் கம்யூனிஸ்டுகளுக்கும் இந்த வெளியீடு ஒரு நல்ல வழிகாட்டி.

பி. சீனிவாசராவ்
தேசியகவுன்சில் உறுப்பினர்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

29—11—58
சென்னை

# விவசாயிகளிடையே நமது கட்சி

[1958 அக்டோபர் மாதம் சென்னையில் நடந்த கம்யூனிஸ்ட் கட்சியின் தேசீய கௌன்சில் கூட்டம் அங்கீகாரம் செய்த "விவசாயப் பிரச்சினையின் சில அம்சங்கள்" என்றத ஸ்தாவேஜின் மொழிபெயர்ப்பு.]

கட்சியின் நேரடி கவனத்தை விவசாயிகளின்பால் திருப்ப வேண்டுமென்று அமிர்தசரஸ் கட்சிக் காங்கிரஸ் அறைகூவல் விடுத்தது. கட்சிக் காங்கிரசின் அரசியல் தீர்மானத்தில் கீழ்க் கண்டவாறு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

"மிகச் சிறந்த சாதகமான சூழ்நிலைகள் இருந்தும்கூட விவசாய சங்கங்களையும், விவசாயத் தொழிலாளர் சங்கங்களையும் ஸ்தாபனம் செய்து அபிவிருத்தி செய்யத் தவறியதானது பூரா ஜனநாயக இயக்கத்தின் மிகப் பெரிய பலஹீனமாகும். இந்தப் பலஹீனத்தைப் போக்குவதற்குப் பிடிவாதமான நடவடிக்கைகளை எடுக்காமல் ஜனநாயக இயக்கம் கட்டப்படபோவதில்லை, கட்சியும் நாட்டின் அரசியல் வாழ்வில் பலமுள்ள பிரதான சக்தியாக வர முடியாது".

பூரா கட்சியின் உணர்வின் ஒரு பகுதியாக இது ஆக்கப்படவேண்டும். விவசாயிகள் மத்தியிலும், விவசாயத் தொழிலாளர்கள் மத்தியிலும் வேலை செய்வது சில கட்சித் தோழர்களின் குறிப்பிட்ட வேலைதான், விவசாயிகளிடையே வேலை செய்வதென்பது ஏதோ ஓர் அரங்கத்தினுடைய வேலை தான், கட்சியினுடைய மிக முக்கியமான வெகுஜன அரங்கக் கடமை அல்ல என்று பார்க்கும் போக்கு நிச்சயமாக நீக்கப்பட வேண்டும்.

சுதந்திரம் ஏற்பட்ட பிறகுள்ள கால கட்டத்தில் விவசாயப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள், அதன் காரணமாகப் பலதரப்பட்ட விவசாயிகள்-விவசாயத் தொழிலாளர்கள் இவர்களது பாத்திரத்தில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் இவைபற்றி கட்சிக்குள் ஒரு முகமான அபிப்பிராயம் இல்லாததுதான் சமீப வருஷங்களில் விவசாய இயக்கத்தின் வளர்ச்சியை பாதிக்கக் கூடிய காரணங்களில் ஒன்று. விவசாய சங்கம் துவக்கப் பட்ட காலத்திலிருந்தே, தேசிய சுதந்திரம், ஜனநாயகம்,

இவைகளுக்கான கோரிக்கையுடன். விவசாய சம்பந்தமான பிரச்சினைகளின் தீர்வுக்கான நிலப்பிரபுத்துவ ஒழிப்பு, உழுபவனுக்கு நிலம், நிலவெளியேற்றத்தைத் தடுப்பது, வாடகை வரி, கடன் சுமை குறைப்பு, மலிவான கடன் வசதி, விவசாய உற்பத்திக்கு நியாயவிலை உத்தரவாதம், நீர்ப்பாசன விஸ்தரிப்பு, கிராமப்புற நிர்வாகத்தை ஜனநாயகப்படுத்துவது முதலியவை போன்ற சில அடிப்படையான கோரிக்கைகளையும் வகுத்து முன்வைத்துள்ளது. இந்தக் கோரிக்கைகள் அடிப்படையில் அப்போதைக்கப்போது குறிப்பிட்ட நிலமைகளுக்குத் தக்கவாறு அனுஷ்டானத்துக்குத் கேற்ற கோஷங்கள் வகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் சென்ற பத்தாண்டு காலத்தில் துரிதமான அபிவிருத்திகள் நாட்டில் ஏற்பட்டுள்ளன. காங்கிரஸ் அரசாங்கங்களினால் எடுக்கப்பட்டுள்ள சட்டமியற்றும் நடவடிக்கைகளின் காரணமாக தேசத்தின் விவசாய சமுதாய அடிப்படை குறிப்பிடத் தக்க அளவு மாறுதல்களுக்குள்ளாயிருக்கிறது. ஜமீன்தாரித்துவம் இனாம் போன்ற நிலப்பிரபுத்துவ அமைப்பு முறை ஒழிக்கப்பட்டுள்ளது. பல ராஜ்யங்களில் சாசுவத குடிவார பாத்தியதை, குத்தகைவாரம் நிர்ணயிப்பு, துண்டுக்காணி நில அமைப்பை ஒன்று சேர்ப்பது, இது சம்பந்தமான புது சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. விவசாய அபிவிருத்திக்கான பல திட்டங்களுக்காக ஒவ்வொரு வருஷமும் பல கோடி ரூபாய்கள் செலவழிக்கப்பட்டு அவை நிறைவேற்றப்பட்டுள்ளன. முதல் ஐந்தாண்டு திட்டம் பூர்த்திசெய்யப்பட்டு இரண்டாவது திட்டம் பாதியில் நிற்கிறது. இவைகளெல்லாம் நமது விவசாயப் பொருளாதாரத்தின் மீது சிலபல பிரதிபலிப்புகளை ஏற்படுத்தியுள்ளது, சில புதிய சமுதாய சக்திகளை கட்டவிழ்த்து விட்டுள்ளது, சில புதிய பிரச்சினைகளை கிளப்பிவிட்டுள்ளது. இவைகளைப் பற்றியெல்லாம் சரியாகக் கணக்கிலெடுத்துப் புரிந்துகொள்ளவேண்டும்.

1952–க்குப் பிறகு காங்கிரசின் விவசாயக் கொள்கைகளின் குறிக்கோள், திசைவழி என்ன என்பது பற்றிய பிரச்சினை, கட்சிக்குள் விவாதத்துக்குரிய பிரச்சினையாக இருக்கிறது. கொஞ்சகாலம் வரையில் காங்கிரஸ் அரசாங்கத்தின் தன்மை என்ன என்பதில் ஏற்பட்ட தவறான கணிப்பின் காரணமாக, எழுந்த சில தவறான கருத்துக்கள் கட்சிக்குள் மேலோங்கி நின்றன. உதாரணமாக காங்கிரஸ் நிலச்சீர்திருத்தச் சட்டங்களின் குறிக்கோள், நிலப்பிரபுத்துவத்தைப் பாதுகாத்துப் பலப்படுத்துவதற்கும் கிராமப்புறங்களில் நிலப்பிரபுத்துவ வர்க்கங்களைக் காங்கிரசின் பிரதான தளமாக்கிக்கொள்வதற்குத்தான் என்று கருதப்பட்டது. இத்தகைய கருத்துக்கள் காங்கிரசின் கொள்கைகளது சாராம்

சத்தையும், புதிய சட்டங்களின் உண்மையான உள்ளடக்கத்தையும் திசையையும் பார்க்க முடியாமல் செய்துவிட்டது.

1954-ல் கட்சியின் மத்தியக் கமிட்டி, தன்னுடைய "விவசாய அரங்கத்தின் கடமைகள்" என்ற தீர்மானத்தில் காங்கிரஸ் நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் பலாபலன்களை சரியானபடி விளக்கியுள்ளது. ஆனால் இந்த சட்ட நடவடிக்கைகள் மூலம் ஏற்பட்டுள்ள, வர்க்க உறவுகளிலேற்பட்ட மாறுதல்களைப் பற்றி அதில் மதிப்பீடு செய்யவில்லை.

இந்தப் பிரச்சினை சம்பந்தமாக ஏற்பட்டுள்ள நமது கண்ணோட்டத்துக்கு சரியான வகையில் உறுப்படியான திசை வழியை பாலக்காடு காங்கிரஸ்தான் காட்டியது. இந்திய சர்க்கார் ஒரு பூர்ஷ்வா—நிலப்பிரபுத்துவ சர்க்கார். இதில் பூர்ஷ்வாக்கள்தான் தலைமைதாங்கும் சக்தி. அந்த பூர்ஷ்வாக்கள் சுயேச்சையான முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையில் இந்தியாவை அபிவிருத்தி செய்வது என்ற தங்கள் கொள்கைக்கேற்ப "நிலப்பிரபுத்துவ சுரண்டல் ரூபங்களை மட்டம் தட்ட முயற்சிகள் செய்யும், பச்சை நிலப்பிரபுக்களை, முதலாளித்துவ நிலச்சுவான்களாக்கும், கிராமப்புறங்களில் ஒரு பணக்கார விவசாயக் கும்பலை உண்டாக்கும். அந்தக் கும்பல்தான் கிராமப் பகுதிகளில் பூர்ஷ்வாக்களின் ஆதரிப்பு தளமாகச் செயல்படும்" (அரசியல் தீர்மானம்) இம்மாதிரி பாலக்காடு காங்கிரஸ் விமர்சித்து முடிவு கண்டது.

பாலக்காட்டில் ஏற்படுத்திக்கொண்ட இந்த விரிவான கண்ணோட்டம் பின்வருஷங்களில் வியாக்கியானப் படுத்தப்படவோ அல்லது உருவகப்படுத்தப்படவோ இல்லை. அதன் காரணமாக இன்னும் குழப்பமான நிலை நீடிக்கிறது. ஒன்றுபட்ட கண்ணோட்டம் ஏற்படவில்லை. ஒன்றுபட்ட கண்ணோட்டம் ஏற்பட்டாலொழிய இயக்கம் துரிதமாக முன்னேற முடியாது. ஆகவே இந்தப் புதிய அபிவிருத்திகள் ஆராயப்படுவதும், காங்கிரஸ் விவசாயக் கொள்கைகளின் பலாபலன்கள் முறையாக மதிப்பீடு செய்யப்படவேண்டியதும், அவசியமாகிறது. அப்படிச் செய்வதன் மூலம்தான் கட்சி தன்னுடைய விவசாய அரங்கக் கொள்கையை வலியுறுத்தி மீண்டும் எடுத்துச்சொல்லி, தன்னுடைய ஊழியர்களை கிராமப்புற மக்களிடையே வேலை செய்வதற்கு அரசியல் ரீதியாக தயார் படுத்த முடியும்.

## வர்க்கக் கொள்கை

நமது பொருளாதார வாழ்வின் பிரதான பிரச்சினையான விவசாயப் பிரச்சினைக்குப் பரிகாரம் காண்பதில் காங்கிரஸ் ச

கார் முற்றிலும் தவறிவிட்டது என்பதில் எள்ளளவும் சந்தேகம் கிடையாது. சென்ற பத்தாண்டுகளில் பற்பல புதிய விவசாய சட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தும், விவசாய அபிவிருத்திக்காக வருடா வருடம் கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்திருந்தும் நம்முடைய விவசாயப் பொருளாதாரம் இன்னும் பிற்போக்கான நிலையிலும், பலஹீனமான உற்பத்தி சக்தி படைத்ததாகவும் அதற்கேற்ப குறிப்பிட்ட எல்லைக்குள் நிற்கும் நிலையில்தான் உள்ளது. உணவு சுயதேவைப் பூர்த்தி அடைவதற்குப் பதிலாக தேசம் மேலும் மேலும் உணவு இறக்குமதியையே சார்ந்து நிற்கவேண்டியிருக்கிறது. விவசாய உற்பத்தி தேக்கம் கண்டுவிட்டது. விவசாயத் தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள் இவர்களது உழைப்பு சக்தி, நிலமின்மையாலும் வேறு வேலையின்மையாலும், வருடத்தின் பெரும்பகுதி காலம் பயன்படுத்தப்படாதிருக்கிறது. கிராமப்புறத்தில் மூலதனம் உருவாகுவது மிகவும் துர்லபமாயுள்ளது. பெரும்பகுதி விவசாய உற்பத்தியாளர்களைப் பொறுத்த வரையில் மூலதனம் போடுவதைவிட போட்ட மூலதனத்தைக் கரைப்பதுதான் அதிகமாகிறது. தீவிரச் சாகுபடி முறையும், நவீன முறைகளின் உபயோகமும் மொத்த சாகுபடி விஸ்திரணத்தில் ஒரு சிறு பகுதியில்தான் நடைபெறுகிறது. கிராமப்புறங்களில் ஏழ்மைநிலை வேகமாக ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. ஏழை விவசாயிகளும் நிலமில்லா விவசாயிகளும், ஏற்கனவேயே போதுமான வேலையில்லாத கடுமையான திண்டாட்டத்துக்கும் குறைந்தகூலிக்கும் பலியாகி உள்ள விவசாயக்கூலிப் பெரும்படையை மேலும் பெருக்கிக்கொண்டு போகிறார்கள். ஒருபுறம், பெரும்பகுதி நிலங்கள் ஒரு சிறு பகுதி நிலப்பிரபுக்களிடம் குவிந்தும், மறுபுறம் பல லட்சக்கணக்கான பட்டாக்கள் துண்டுதுக்காணி நிலங்களாகவும் அவற்றை ஏழை விவசாயிகள் மத்தியதர விவசாயிகள் இவர்களால் விவசாயம் செய்யப்படுவதுமான நிலைதான் இன்றைய இந்திய விவசாயத்தின் பிரதான அம்சமாயிருக்கிறது. தேசத்தின் பெரும்பகுதியில் இன்னும் பலவிதமான அரைகுறை நிலப்பிரபுத்துவச் சுரண்டல் நீடிக்கிறது. நிலத்தில் உழைக்கும் உண்மையான விவசாயிகள், ஏறிக்கொண்டே போகும் வரி, வாடகை, கடன், விளைபொருள் விலை குறைவு, தேவைப்பண்டங்களது விலையேற்றம் முதலிய சுமைகளின்கீழ் நொறுங்கிவருகிறார்கள்.

விவசாயப் பிரச்சினையை காங்கிரஸ் அரசாங்கங்கள் தீர்க்கத் தவறியிருப்பது தற்செயலான விஷயம் அல்ல. இந்த அரசாங்கங்களினால் அனுஷ்டிக்கப்படும் வர்க்கக் கொள்கைகளின் விளைவுதான் அது. இந்தக் கொள்கைகள் பெரும்பாலான விவசாயிகளின்

நலன்களுக்கும், பொதுவாகவே இந்திய மக்களின் நலன்களுக்கும் நேர் எதிரான முரண்பாடுள்ளவை.

காங்கிரசின் விவசாயக் கொள்கைகளின் நோக்கமும் திசையும் விவசாயிகளை அவர்களது நீண்டநெடுங்காலத்திய அடிமைத்தளை களிலிருந்து விடுதலை செய்வதல்ல. அதற்கு நேர்மாறாக நிலப்பிர புத்துவ நிலச்சுவான்களை முதலாளித்துவ நிலச்சுவான்களாக மாற்றி அமைப்பதும், ஒருபணக்கார விவசாயக் கும்பலை சிருஷ்டிப் பதும், தேசத்தின் முதலாளித்துவ வளர்ச்சிக்கான தேவைகளைப் பூர்த்தி செய்ய விவசாயச் செல்வ உபரியை உற்பத்தி செய்வதற்கு அவர்களைச் சார்ந்து நிற்பதும்தான் காங்கிரஸ் விவசாயக் கொள்கை களின் குறிக்கோளும் திசையும். இந்தப் பகுதியினர்தான் கிராமப் புறங்களில் ஆளும் வர்க்கங்களது பிரதான அரசியல் தளமாக அமைவார்கள். பத்து வருடத்திய அனுபவம் இதைத்தான் நமக்கு ருசுப்பிக்கிறது. இந்த நோக்கம் காங்கிரஸ் அரசாங்கங்களின் சகல சட்ட நடவடிக்கைகளிலும் மையமாயிருப்பதை துல்லிய மாகக் காணலாம்.

## பொருளாதாரத்தைப் பணமயமாக்குவது

கிராமப் பகுதிகள் பூராவிலும் நாணயப் பெருக்குப் பொருளா தாரம்—வேகமாக வளர்ச்சியடையும் பகைப்புலனின் மத்தியில் மேலே சொன்ன இந்தக் குறிக்கோளை பூர்த்தியாக்கும் மார்க் கம் நடைமுறையாகி வருகிறது. பொதுமக்களுக்கு விநியோகிக் கப்பட்ட மொத்த நாணயம் 1950–51ல் 1980 கோடியாக இருந் தது 1956-57ல் 2313 கோடியாக உயர்ந்திருப்பது கவனிக்கத் தக்கது. இதே காலகட்டத்தில் 1951-52ல் 546.4 கோடியாக இருந்த பாங்கு கடன்கள் 1956-57ல் 781.65 கோடியாக உயர்ந் துள்ளது. பற்றுக்குறை பட்ஜெட்டை சரிக்கட்ட உபரியாக நோட்டு அச்சடிப்பது 1951-52ல் 80 கோடியாக இருந்து, 1955-56ல் 253 கோடியாக உயர்ந்துள்ளது. திட்டச் செலவு 1951-52ல் 259.4 கோடியாக இருந்தது. 1955-56ல் 666.5 கோடியாக உயர்ந்துள்ளது.

நம்முடைய பொருளாதாரத்தில் திணிக்கப்பட்ட இவ்வளவு பெரிய அளவுள்ள வாங்கும் சக்தியின் ஒரு பகுதி, விவசாயப் பகு திக்கும் கொண்டு போகப்பட்டு, கிராமப்புற வாழ்வில் முதலாளித் துவ சக்திகளை எல்லா வகைகளிலும் பலப்படுத்துவதற்கான முயற்சி நடப்பதைப் பார்க்கிறோம்.

விரிவடைந்து வரும் பாங்குக் கடன்களின் அடிப்படையில் உணவு தான்யங்களிலும் மூல விவசாய விளைபொருள்களின் வியா

பாரமும் முண்டி நிற்பதையும், சூதாட்ட எண்ணத்துடன் சேமிப்பு விரிவாக நடைபெறுவதையும் சென்ற சில வருஷங்களாக நன்கு காணலாம். 1956 ஏப்ரலில் உணவுதான்ய விலையேற்ற அறிகுறி காண்பித்ததும், சென்ற வருஷத்தைவிட பாங்கு கடன் 100% நூறு சத விகிதம் உயர்ந்ததிலிருந்து எந்த அளவு வேகத்தில் பாங்கு களால் உணவு தான்யங்கள் ஈட்டின்பேரில் முன்பணம் கொடுக்கப் பட்டது என்பதைப் பார்க்கலாம். விவசாய உற்பத்தியின்மீது இந்திய அன்னிய ஏகபோக வியாபாரக் கும்பலுடைய பிடிப்பு சமீப வருடங்களில் மேலும் இறுகியிருப்பது விசேஷ அம்சம். இதன் காரணமாக, உற்பத்தியாளர்கள், தாரதம்மியமான பரி வர்த்தனை மூலமாகவும் தாறுமாறான விலைவாசி ஏற்ற இறக்கத்தி னாலும் கடுமையாகச் சுரண்டப்பட்டுள்ள நிலை ஏற்பட்டது.

கிராமப் பகுதிகளில் பணப் பெருக்க பொருளாதாரம் விரி வடைந்ததன் காரணமாகவும், வட்டிக்குவிடும் மூலதனமும் குறிப் பிடத் தக்க அளவு அதிகமாகியுள்ளது. கிராமப்புறக் கடன் பரி சீலனை சர்வே பிரகாரம், கிராமப் புறக்கடன் தொகை மொத் தம் 900 கோடியாகவும், அது வளருவதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. இந்தத் தொகைக்கு குறைந்தபட்சம் ரூ. 100 கோடி யாவது வருடம் ஒன்றுக்கு வட்டியாகிறது. அதே சமயம் விவ சாயிகளுக்கு, விவசாயக் காரியங்களுக்கான கடன், நியாய வட்டி விகிதத்தில் கிடைப்பது மேலும்மேலும் கடினமாகி வருகிறது. கூட்டுறவு மூலம் கிடைக்கும் கடன், கவர்மெண்டு கடன்கள், பாங் குகளில் பெறும் முன்பணம் இவை எல்லாவற்றையும் சேர்த்தா லும்கூட மொத்தக் கிராமப் பகுதி கடன் தேவையில் ஒரு சிறு பகுதிதான் ஆகிறது. கடன் பெறுவதற்கு முடியாத இந்த நிலைமை விவசாயம் க்ஷீணிப்பதில் முடிகிறது. அதுமட்டுமல்ல ஏழை விவ சாயிகளிடமிருந்து நிலம் கைமாறுகிறது.

தேசிய விஸ்தரிப்புத் திட்டம், சமுதாய வளர்ச்சி திட்டம் இதர கிராமப்புறத் திட்டங்களுக்கு ஐந்தாண்டுத் திட்ட செல வினங்களின் காரணமாக ஏற்பட்ட, பெரும் பகுதி புதிய வாங்கும் சக்தியும், நிலப்பிரபுக்கள், பணக்கார விவசாயிகள் இவர்கள் கைக்கு மாறிவிட்டது. இதன் காரணமாகவும் இந்த வர்க்கங்களின் பொருளாதார நிலைமை ஒட்டுமொத்தமாக பலப்பட் டுள்ளது.

## விவசாய சீர்திருத்தங்களின் விளைவுகள்

இந்தியப் பொருளாதாரத்தின் பொதுவான வளர்ச்சிப் பாதை கிராமப் புறங்களில் முதலாளித்துவத் தொடர்புகளை விரிவு

படுத்துவதாகவும், விவசாய அமைப்பை மேலும் மேலும் முதலாளித்துவச் சுரண்டலுக்கு ஆளாக்குவதாகவும் இருப்பதைப் பார்க்கலாம். இந்தப் பகைப் புலனில், காங்கிரஸ் நிலச்சீர்திருத்த நடவடிக்கைகளின் உருப்படியான பலாபலன்களை மதிப்பிட்டாக வேண்டும்.

ஜமீந்தாரி, ஜாகிர்தாரி ஒழிப்பு சட்டங்கள் சந்தேகத்துக்கிட மின்றி நிலப்பிரபுத்துவ நலன்களை மட்டந்தட்டியிருக்கிறது. பெரிய அளவுக்கு நிலப்பிரபுத்துவத்தின் ஏகபோக நிலபாத்திய தையை பலஹீனப்படுத்தியுள்ளது. ஆனால் இந்த நடவடிக்கைகள், சாராம்சத்தில் இது வரையில் நிலப்பிரபுத்துவ வர்க்கத்தால் ஸ்வீகரிக்கப்பட்டு வந்த விவசாய செல்வத்தை ஆளும் முதலா ளித்துவ வர்க்கமும் அதன் முதலாளித்துவ அரசும் பெரும் பகுதி ஸ்வீகரித்துக்கொள்ள வசதிசெய்யும் வகையில் உருவகப்படுத்தப் பட்டுள்ளன.

உண்மையில் அரைகுறை நிலப்பிரபுத்துவ நிலபாத்தியதை ஒழிப்பானது, கிராமப் பகுதிகளில் தன்னைப் பலப்படுத்திக்கொள்ள முயலுகிற பிரதானமான பூர்ஷ்வாப் பகுதியின் நலன்களுக் கொத்த வகையில்தான் முடிவாகியுள்ளது. நமது பொருளாதாரத்தில் கிராமப்புறப் பகுதிதான் அடிப்படையானது. தேசத்தின் பொரு ளாதார அபிவிருத்தியைக் கட்டுப்படுத்தக்கூடிய ஆதிக்கம் ஏற்படுத்திக்கொள்ளவே இப்படிச் செய்யப்பட்டது. ஆகவேதான் ஜமீன்தாரி ஜாகிர்தாரி ஒழிப்பைத் தொடர்ந்து தானாகவே சுயேச்சையான சொத்துரிமை மாற்றம் உண்மையில் உழுது பயிரிடுபவர்களுக்கு ஏற்படவில்லை. அதற்கு நேர் மாறாக விவசாயி களில் ஏழைப் பகுதியினர்கள் சட்டபூர்வமாகவும் சட்டவிரோத மாகவும் பெருமளவுக்கு நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். உதாரணமாக உத்தரப்பிரதேசத்தில் மொத்தச் சாகுபடியாளர் களில் (15) பதினைந்து சதவிகிதத்தினரான மேல்தட்டுப் பகுதி விவசாயிகள்தான், இதுவரையில் பூமிதாரி உரிமைகளை ஆர்ஜிதம் செய்துகொள்ள முடிந்தது. மேற்கு வங்காளத்தில் வாரம் பிரித்துக்கொள்ளும் விவசாயிகளுக்கு இன்னும் குடிவார பாத்தியம் கூட கிடைக்கவில்லை. மேலும் ஒரு சிறு பகுதியினரான உள் பட்டாதாரர்களுக்கு நிலபாத்தியதை அவர்களின் பெயரில் ஏற்பட் டுள்ளது. இவர்கள் இதற்கு முன்னும் இதே உரிமைகளை அனுப வித்து வந்தவர்கள்தான்.

இந்த ஜமீன் ஒழிப்பு சட்டங்கள், நிலப்பிரபுத்துவ நிலச்சுவான் களுக்கு தங்களைப் பெரிய நிலச்சொந்தக்காரர்களாகப் புனர்வாழ் வேற்படுத்திக்கொள்ளும் வகையில், கணிசமான நஷ்டஈட்டுத்

தொகை கொடுத்தும், பெரும்பகுதி நிலங்களை பண்ணை நிலம், பொதுநிலம் என்ற பல பெயர்களின் பேரில் தானே வைத்துக் கொள்ளவும், அதில் அனுபோகம் கொண்டிருந்த விவசாயிகளை வெளியேற்றவும், உதவியுள்ளது. ஆகவே ஜமீன்தார் ஜாகிர்தார் முதலிய, நிலத்துக்கு நேரடியாக சம்பந்தமில்லாத நிலப்பிரபுக்களுடைய மறைவுக்குப்பின், அதே இடத்தில் அந்தப் பகுதிகளில் பெரு நிலச் சொந்தக்காரர்களான ஒரு வர்க்கம் தோன்றியுள்ளது. இந்தப் பெரு நிலச்சுவான்தார்கள் மொத்த நிலத்தில் கணிசமான பகுதியை சொந்தமாக்கிக்கொண்டுள்ளனர். தங்கள் பொருளாதார நிலமை காரணமாக இவர்களே கிராமப் பொருளாதாரத்திலும் ஆதிக்கம் வகிக்கிறார்கள். இத்துடன்கூட பணக்கார விவசாயிகளும் தங்கள் நிலையை கணிசமான அளவு பலப்படுத்திக் கொண்டு, கிராமப்புற வாழ்வில் முக்கியமான அந்தஸ்தை ஏற்படுத்திக்கொண்டுள்ளார்கள் என்பதும் ஒரு உண்மை.

இருந்தாலும் இதுவரையில் ஜமீன்தார் பிரதேசங்களாயிருந்த உத்தரப்பிரதேசம், வங்காளம், பீஹார், ராஜஸ்தானம் முதலிய இடங்களில் முதலாளித்துவ நிலச்சுவான் வர்க்க வளர்ச்சியானது ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் ஏற்பட்டுள்ளது. ஆனால் இந்த நிகழ்ச்சி வளர்ந்து கொண்டுவருகிறது. பெரும் பகுதி நிலங்களை சொந்த நிலமாகப் பல பெயர்களில் தங்களிடமே வைத்துக்கொள்ள முடிந்த சிலபெரிய ஜமீன்தார்கள் ஜாகிர்தார்கள், நவீன சாதனங்களுடன் முதலாளித்துவப்பண்ணை சாகுபடியை ஆரம்பித்துள்ளனர். ஆனால் இத்தகைய சாகுபடி முறையிலுள்ள நிலப்பரப்பு, இன்னும் மிகக் குறைவுதான். இதற்குக் காரணம் இந்தப் பகுதிகளின் பொதுவான பின் தங்கிய பொருளாதாரத் தன்மையும், வாரம் வாங்குவது, தான்யமாகத் துவட்டி வாங்கும் முறை, நில வாடகைக்காக வேலை வாங்குவது இதுபோன்ற நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்ச அம்சங்கள் அங்கு இன்னும் பலமாக உள்ளன. இத்தகைய சுரண்டல் முறைக்கு திட்டவட்டமாய் முடிவுகட்ட ஜமீன் ஒழிப்புத் தவறிவிட்டது. கிராமப் பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்தும் பெரும்பகுதி நிலச்சுவான்தார்கள் முதலாளித்துவச் சுரண்டல், அரைகுறை நிலப்பிரபுத்துவச் சுரண்டல் இரண்டுவகைகளிலும் ஈடுபடுகிறார்கள்.

## முதலாளித்துவ நிலச்சுவான்கள்

பொதுவாகப் பேசுமிடத்து முதலாளித்துவ நிலச்சுவான்கள் ஒரு வர்க்கமென்ற வகையில், பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலேயே குறிப்பிடத்தக்க அளவுக்கு, விவசாயத்தில் முதலாளித்துவ வளர்ச்சி அடைந்திருந்த ரயத்துவாரிப் பிரதேசங்களில், வளர்ந்திருப்பது

ஸ்பஷ்டமான விஷயம். ஆந்திரா, பஞ்சாப், பீகார், தமிழ்நாட்டின் காவேரிப் பாசன திரம், கோவை ஜில்லா, குஜராத்தில் சில ஜில்லாக்கள், மகாராஷ்டிரம், மைசூர் முதலிய இடங்களில் கிராம வாழ்வில் முதலாளித்துவ நிலச்சுவான்கள் மற்ற இடங்களைவிட ஒரு சக்திவாய்ந்த அம்சமாய் விளங்குகிறார்கள். இருப்பதில் நல்ல நிலங்களில் பெரும் பகுதிக்கு அவன் சொந்தக்காரன். பெரும்பகுதி விவசாயத் தொழிலாளர்களை அவன் வேலைக்கமர்த்திக்கொள்கிறான். அவன் ஒரு லேவாதேவிக்காரனும் கூட. சாகுபடிதாரர்களுக்குத் தேவையான கடன் வசதிகளில் ஒரு கணிசமான பகுதி அவனால் கொடுக்கப்படுகிறது. உணவு தான்யம் சேமிப்பதிலும் கள்ள மார்க்கட் வியாபாரம் செய்வதிலும் அவன் ஈடுபடுகிறான். விவசாய சார்புள்ள கைத்தொழில்களான அரிசிமில்கள் எண்ணெய் மில்கள் சர்க்கரை ஆலைகள் முதலியவைகளுடன் நெருங்கிய சப்பந்தமுடையவனாக இருக்கிறான். ஆளும் வர்க்கங்களுடனும், நிர்வாக இயந்திரத்துடனும் நெருங்கிய தொடர்புடையவனாகவும் அவன் இருக்கிறான்.

ரயத்வாரிப் பிரதேசங்களில் காங்கிரஸ் அரசாங்கங்களால் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட குத்தகைவார, குடிவார பாத்தியதைச் சட்டங்கள், யதார்த்தத்தில் பெரிய அளவுக்கு விவசாயிகள் வெளியேற்றப்படுவதில்தான் கொண்டுபோய் விட்டிருக்கிறது. இந்தக் குடிவார சட்டங்களுடைய, பிரகடனப் படுத்தப்பட்ட நோக்கங்களில் ஒன்று சொந்தச் சாகுபடி முறையை ஊக்குவிப்பதென்பதாகும். ஆகவே ஒவ்வொரு குடிவாரச் சட்டமும் நிலச் சொந்தக்காரர்களுக்குச் சில நிலமீட்சி உரிமைகளை அளித்துள்ளது. இதன் தவிர்க்கமுடியாத விளைவாக பெரிய அளவுக்கு விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர், நிலப்பிரபுக்களது "சொந்தச் சாகுபடி" விஸ்தீரணம் வேகமாக விரிவடைந்துள்ளது. இந்தச் சட்டங்களிலுள்ள ஒவ்வொரு ஓட்டையும் குறிப்பாக நில மீட்சி உரிமை பற்றிய ஷரத்தும், தயவு தாட்சண்யமின்றி எவ்வளவு அதிகப்படியாக சாகுபடிதாரர்களை அவர்கள் பயிரிடும் நிலங்களிலிருந்து வெளியேற்ற முடியுமோ அவ்வளவு வெளியேற்றப் பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக ஆந்திராவில் இந்தக் குடிவார சட்டம் கொண்டுவரப்பட்டு, ஒரு வருஷத்துக்குள் பெரும்பகுதி குடியானவர்கள் அவர்கள் சாகுபடி செய்த நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டு அந்த நிலங்களெல்லாம் சொந்தக்காரர்களால் "சொந்த சாகுபடி"யின் பெயரால் எடுத்துக் கொள்ளப்பட்டுவிட்டது. பம்பாயில் குடிவார சட்டங்கள் அமுலுக்கு வந்தபிறகு, உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்ட புள்ளி விபரங்களின் பிரகாரமே "பாதுகாப்புள்ள குடியானவர்கள்"

கையிலிருந்த நிலப் பரப்பில் சரிபாதி 50 சத விகிதம் குறைந்து விட்டது. ஹைதராபாத்தில் அத்தகைய நிலப்பரப்பு 59 சத விகிதமாகக் குறைந்து விட்டது.

ஆகவே இதுவரையில் ரயத்துவாரிப் பிரதேசங்களாக இருந்த இடங்களின் பெரும்பகுதிகளில் ஒரு விதமான முதலாளித்துவ நிலச்சுவான்தாரித்துவம் அபிவிருத்தி அடைந்திருப்பது வெளிப்படையாய் தெரிகிறது. இந்த அபிவிருத்தியிலிருந்து வெளிவரும் விஷயம் முதலாவதாக கிராம சமூகத்தில் வர்க்க வித்தியாசத்தின் தன்மைகள் வளருவதும், ஏற்கனவே ஜமீன்தாரிப் பிரதேசங்களாக இருந்த இடங்களில் முன்னிருந்ததைவிட விவசாயத் தொழிலாளர் எண்ணிக்கையின் சதவிகிதம் கணிசமாக அதிகமாவதுமாகும். இரண்டாவதாக நிலத்தின்மீது மூலதனம் போட்டு, நவீன சாகுபடி முறைகளைக் கையாண்டு, பெரிய அளவுக்கு கூலி ஆட்களை ஈடுபடுத்திக்கொள்ளும் பெரிய நிலச்சுவான்கள் கையில் அதிகப்படியான நிலப் பகுதி குவிந்திருப்பதாகும். மூன்றாவதாக உணவு தான்ய சாகுபடியைவிட அதிகப்படியான பண மதிப்புள்ள பணப் பயிர் சாகுபடி அதிகமாவதும் அதன் காரணமாக பெரிய நிலச்சுவான்களது கையில் மூலதனம் சேருவதற்கான வாய்ப்புக்கள் அமைவதுமாகும். மேற் கூறப்பட்ட இத்தகைய பெருநிலச்சுவான் பகுதியைத்தான் இந்தப் பிரதேசங்களில் விவசாய அபிவிருத்தி ஏற்படுவதற்காக அரசாங்கம் நம்பிக்கொண்டிருக்கிறது.

இத்தகைய அபிவிருத்தியானது இந்தப் பிரதேசங்களில் நிலப் பிரபுத்துவ மிச்ச சொச்சங்கள் மறையும்படி செய்துவிட்டதாக முடிவுக்கு வந்துவிடக்கூடாது. விஷயம் என்னவென்றால், இந்தப் பகுதிகளில்கூட, வாரச்சாகுபடி, கடுமையான வாடகை அடிப்படையில் உள் குத்தகை, இதர நிலப்பிரபுத்துவ சுரண்டல்கள் இன்னும் சர்வசாதாரணமாக அமுலிலிருக்கத்தான் செய்கிறது என்பது உண்மை. இருந்தாலும் கூலிஆள் மூலம் சாகுபடி செய்ய மேலும்மேலும் பெருநிலச் சுவான்கள் ஈடுபடுகிறார்கள் என்பது தான் பிரதானமாகி வருகிறது. உச்சவரம்பு கட்டுவது சம்பந்தமாக உள்ள சட்டங்கள் பெருநிலச்சுவான் வர்க்கங்களை தொடாமலும் அவர்களிடமுள்ள பெரிய நிலப்பரப்புகளை பத்திரமாக வைத்துக் கொள்ளவும்தான் வழி வகை செய்திருக்கிறது. பெரும்பகுதி ராஜ்யங்கள் இனி வாங்கப்படும் நிலங்களுக்குத்தான் வரம்பு கட்டியுள்ளது. இந்தச் சட்டமும் ஏட்டளவில்தான் உள்ளது. தற்போது உள்ள நில உடைமைகளின் பேரில் உச்ச வரம்பு கட்டியுள்ள சில ராஜ்யங்களில் சட்டத்தில் பல ஓட்டைகளை வைத்துள்ளனர். அந்த ஓட்டைகள் பெரும் நிலச்சுவான்கள், தங்கள் எஸ்டேட்டுகள்

தொடப்படாமல் பாதுகாத்துக்கொள்வதற்கோ அல்லது வரம்பு கட்டும் கொள்கை தங்கள் விஷயத்தில் அமுலாகாத வண்ணம் தங்கள் குடும்பத்தினர்களிடையே பாகப் பிரிவினை மூலம் துண்டாடி விடுவதற்கோ வசதி செய்து கொடுக்கின்றன. வரம்பு கட்டுவது அமுல் நடத்தியதன் மூலம் எந்த இடத்திலும் ஒரு ஏக்கர் நிலம் கூட ஆர்ஜிதம் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ''நன்கு பராமரிக்கப்படும் பண்ணை''க்கு விதிவிலக்கு என்ற விஷயம் வரம்பு கட்டும் இந்த நடவடிக்கைக்கு முடிவு கட்டிவிடுகிறது. இந்த அடிப்படையில் எந்தப் பெரியதொரு பண்ணையும் வரம்பு கட்டுவதிலிருந்து விதிவிலக்குக் கோர முடியும்.

துண்டு நிலங்களை ஒன்றுசேர்ப்பது என்ற இன்னொரு நடவடிக்கையின் மூலம் நிலம் படைத்த வர்க்கங்களில், பணக்காரப் பகுதியினரது பொருளாதார நிலை பலப்படுத்தப்படுகிறது. பெரிய நிலச்சுவானும் அல்லது பணக்கார விவசாயியும்தான் எப்படியாவது யுக்தி செய்து ஏழை விவசாயிகள் மத்திய விவசாயிகளது மிக உயர்ந்த தரமுள்ள நிலங்களையும், நிலப்பரப்புக்களையும் பெற்றுக் கொள்ள முடிகிறது.

## வரி விதிக்கும் கொள்கை

அரசாங்கத்தின் வரி விதிக்கும் கொள்கை, சாதாரண ஜனங்கள் மீது மேலும் மேலும் பளுவை சுமத்துவதாகத்தான் இருந்து வருகிறது. பெரிய முதலாளிகளுக்கு வரிச்சலுகைகள் கிடைத்து வருகிறது அதற்கு நேர்மாருக மத்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்கார்களும் மேலும் மேலும் நேரடியான, மறைமுகமான புதிய வரிகளை அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி தேவை என்பதன் பெயரால் சாதாரண மக்கள் மீது விதித்து வருகிறார்கள். மத்திய சர்க்காரின் வரி விதிப்பு நடவடிக்கைகள்மட்டும் சென்ற இரண்டாண்டுகளில் வருட மொன்றுக்கு ரூ. 200 கோடிவரையில் அதிகப்படியான பளுவை சுமத்தியுள்ளது. இந்தத் தொகையில் பெரும்பகுதிகளால் வரியிலிருந்தும் விற்பனை வரியிலிருந்தும் பெறப்பட்டுள்ளது. இந்த வளரும் வரிச்சுமைகள் மூலமும், பணம் வீக்கம் உண்டாகக்கூடிய பெரிய அளவுக்கான அதிகப்படி நோட்டுகள் வெளியிடும் (Deficit financing) கொள்கை மூலமாகவும் மேலும் பளு அதிகமாக்கப்படுகிறது. இந்த நடவடிக்கை பாங்கு இருப்புத் தொகையை வீக்கமடையச் செய்து அதைத் தொடர்ந்து பாங்கு கடன்களையும் விரிவாக்குகிறது. இந்த நிலை தொழில் அதிபர்களாலும் பெரிய வியாபாரிகளாலும் மார்க்கெட் மீதுள்ள அவர்களது ஏகபோகப் பிடிப்பை பலப்படுத்திக்கொள்ளப் பயன்படுத்தப்படுகிறது.

இத்தகைய நடவடிக்கைகளின் பலனாக, விவசாய விளை பொருளை விற்பனை செய்பவன் என்ற வகையிலும், தொழிலுற் பத்திப் பொருளை வாங்குகிறவன் என்ற வகையிலும், இருபுறமும் விவசாயி உறிஞ்சப்படுகிறான். இன்று சாதாரண ஜனங்கள் மீது, பணவீக்கம் என்பது மிகப் பெரிய தனிஒருவரியாக உள்ளது. பணவீக்கம், மூலதனம் குவிவதற்கும், ஏகபோகத்தன்மை வளரு வதற்கும், சக்தியானகருவியாக உள்ளது. ஜனங்களை சர்க்கார் உறிஞ்சுவதற்கான பெரியதொரு தந்திரமாகவும் அது இன்று இருக்கிறது.

கிராமக் கடன் சுமையைக் குறைக்கவோ, அல்லது மலிவுக் கடன் வசதி செய்துதரவோ, சர்க்கார் மறுக்கிறது. இருக்கும் மிகக் குறைவான கூட்டுறவு, சர்க்கார், கடன் வசதிகளும் பெரும் பாலும் நிலப்பிரபுக்களாலும் பணக்காரவிவசாயிகளாலும்தான் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது.

பணக்கார நிலச்சுவான்களது நலன்களை முன்னுக்குக் கொண்டுவருவதென்ற கொள்கைக்கேற்ப அரசாங்கம் அவர்க ளுக்கு நேரடியாகவே பொருளாதார உதவியும், தொழில் நுணுக்க உதவியும் பெரிய அளவுக்குக் கொடுத்து வருகிறது. மற்றப் பகுதி விவசாயிகளுக்கு அறவே கிடையாது என்று சொல்லக்கூடிய அளவுக்கு இது நடக்கிறது. சமுதாய நலத் திட்டத்தின் கீழும் செலவாகும் பணத்தின் பெரும்பகுதி பெரிய பெரிய நிலச்சுவான்கள், பணக்கார விவசாயிகளது சட்டைப் பைகளுக்கே போய்ச்சேருகிறது என்பது ஊரறிந்த உண்மை. தக்காவிக் கடன்களாகப் பெரும் தொகைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இயந்திரக் கலப்பைகள், எண்ணெய் இஞ்சின்கள் அல்லது குழாய் கிணறு இறக்க விசேஷ விவசாயக் கடன்கள் அவர்களுக்கு உத்திரவிடப்படுகிறது. அரசாங்கத்தாரால் வினியோகம் செய்யப்படும் பொறுக்கு விதையும் உரமும் பெரும் பங்கு அவர்களால்தான் விழுங்கப்படுகிறது. பெரும்பாலான இடங் களில் கூட்டுறவு நாணய சங்கங்களை அவர்கள்தான் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். அவைகள், அவர்களது நலன்களுக்குத்தான் பயன்படுகிறது. கிராமக் கடன் பரிசீலனைக் கணக்குப் பிரகாரம் கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாக சிறு விவசாயிகளுக்கும் மத்திய விவசாயிகளுக்கும் சராசரி கிடைக்கும் கடன், முறையே 1 9 ரூ. யும் 4·7 ரூ.யும் தான். பெரும் நிலவிவசாயிகளுக்குக் கிடைப் பதோ ரூ. 21 வரை இருக்கிறது. நிர்வாக இயந்திரத்தோடு உள்ள அவர்களது சமூகத் தொடர்புகளும், கிராமப் பஞ்சாயத்து கள் மீதுள்ள அவர்களது ஆதிக்கமும் எண்ணற்ற சொந்த வசதி களை வற்படுத்திக் கொள்ள உதவுகிறது.

## முதலாளித்துவ உறவுகளின் வளர்ச்சி

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் விவசாயத்தில் முதலாளித்துவ உறவுகளை அபிவிருத்தி செய்வதும், முதலாளித்துவ நிலச்சுவான்கள், பணக்கார விவசாயிகள், இவர்களைக் கொண்டு உருப்படியானதொரு நிலச்சுவான் வர்க்கத்தை ஈன்றெடுத்து பராமரித்து வருவதும்தான் காங்கிரஸ் கொள்கைகளின் பொதுவான குறிக்கோளும் திசைவழியுமாகும். அந்த நிலச்சுவான் வர்க்கம் அரசாங்க உதவியோடும், ஆதரவோடும் விவசாயத்தை நவீன முதலாளித்துவ பாணிகளில் வளர்த்து உற்பத்தியைப் பெருக்குவதன்மூலம், தேசத்தின் பொதுவான பொருளாதார வளர்ச்சிக்கான தேவைகளைப் பூர்த்தி செய்ய உபரி உற்பத்தியை ஏற்படுத்திக் கொடுக்கும் என்பதுதான். இந்த நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுதான் காங்கிரஸ் அரசாங்கங்கள், பொதுவாக நிலப்பிரபுத்துவ உறவுகளைக் கல்லியெறியும்போதே அதே நிலப்பிரபுக்களுக்கு உருப்படியான சலுகைகளையும் கொடுத்துள்ளது. முதலாளித்துவ பண்ணை சாகுபடி முறையில் அவர்களே ஈடுபடக்கூடிய அளவுக்குப் போதிய நிலத்தை அவர்களிடமே விட்டுவைக்கிறது. இத்தகைய நோக்கங்களைப் பூர்த்தி செய்வதற்காகத்தான், பல லட்சக்கணக்கான சாகுபடியாளர்களை வெளியேற்ற அனுமதிக்கப்படுகிறது, நிலவிநியோகம் திரும்பவும் அனுமதிக்கப்படவில்லை, சாகுபடி செய்யும் பெரும்பகுதியினருக்கு நில உடைமை பாத்தியதை மறுக்கப்படுகிறது, நடைமுறையில் கேலிக்கூத்தாக்கப்பட்ட நிலவரம்பு கட்டும் கொள்கையைக்கூட கைவிடும்படிக்கான நிலைக்கு வந்துள்ளது.

விவசாயத்தில் முதலாளித்துவ உறவுகளை விஸ்தரிப்பதற்கான அம்சங்களில் முக்கியமானதொன்று விவசாயத் தொழிலாளர்கள் ஒரு வர்க்கமாக வளர்ந்துள்ளதுதான். ஆந்திரா, தமிழ்நாடு, கேரளா, மைசூர் முதலிய ராஜ்யங்களில் மொத்த கிராம ஜனத்தொகையில் விவசாயத் தொழிலாளர்கள் 30 லிருந்து 45 சத விகிதம் வரையில் உள்ளனர். தேசம் பூராவிலும் மொத்த ஜனத்தொகையில் விவசாயத் தொழிலாளர் 30 சத விகிதமாயிருக்கிறார்கள். கிராம ஜனத் தொகையின் இந்த மிகப் பெரிய பகுதி மக்கள் வருடத்தில் பாதிநாள் வேலையின்றித் திண்டாடுகிறார்கள். அவர்களுக்கு வழங்கப்படும் கூலி மிகக்குறைவு. சமுதாய நலச் சட்டங்களால் ஒரு லாபமும் அவர்களுக்குக் கிட்டுவதில்லை. இப் பகுதியினர் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட ஜாதிகளிலிருந்து வந்திருப்பதால் சமூகக் கொடுமைகளுக்கும், அரை குறை நிலப் பிரபுத்துவ மிலேச்சத் தனமான சுரண்டல் முறைக்கும் ஆளாகியுள்ளனர்.

**தீவிரப்பட்ட நெருக்கடி**

பிரதானமாக காங்கிரஸ் விவசாயக் கொள்கைகளின் ஜன விரோதப் போக்கின் காரணமாகத்தான், இந்தியாவில் விவசாய நெருக்கடி தீவிரப்பட்டு சமீப வருஷங்களில் தீராத கடுமையான உணவு நெருக்கடியாகக் காட்சியளித்துள்ளது.

ஏகப்பட்ட சட்டங்கள் இயற்றியும், கோடிக்கணக்கான பணம் செலவழித்தும், முதலாளித்துவ விவசாயத்தை வளர்க்கும் சேவையை நடத்தியும் நமது விவசாயப் பொருளாதாரத்தில் குறிப்பிடத் தக்க அளவு முன்னேற்றம் ஏற்படுத்த முடியவில்லை. இதற்கான காரணம், நிலம் உழுது பயிரிடுபவர்களுக்கு திரும்ப விநியோகிக்கப்படவில்லை. நிலத்தில் பிடிப்புள்ள பலதரப்பட்ட நலன்களுடையோர்கள், லேவாதேவிக்காரர்கள், ஏகபோக வியாபாரிகள் இவர்களது சுரண்டல்களை ஒழிப்பதற்குப் பதிலாக ஓரளவு குறிப்பிடத்தக்க அளவுக்குக்கூட மட்டம் தட்டவில்லை. யதார்த்தத்தில் நடந்தது கிராமப்புற வெகுஜனங்கள் பரம்பரையான நிலப்பிரபுத்துவ சுரண்டலிலிருந்து பூரணமாக விடுவிக்கப்படாத நிலையில் புதிய முதலாளித்துவ சுரண்டல் முறைக்கும் ஆளாக்கப்பட்டுள்ளனர். பூரா விவசாய அமைப்பினுடைய நெருக்கடியை இவை யதார்த்தத்தில் ஆழமாக்கியுள்ளன.

நமது விவசாயப் பொருளாதாரத்தை அதனுடைய பண்டைய காலப் பிற்போக்குத்தன்மையிலிருந்து முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையின் மூலம் தூக்கி நிறுத்தமுடியாதென்பது அப்பட்டமான உண்மை. பலமான நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்சங்கள் ஜீவித்திருக்கும் ஒரு அமைப்பில், விவசாயிகளில் 75 சதவிகிதத்தினர் பொருளாதார ரீதியில் கட்டுபடியாகாத சின்னஞ்சிறு நிலத்துண்டுகளை வைத்திருக்கும்போது, குத்தகை வாடகை, வரிகள், வட்டி இந்த மூன்று சுமைகளும் உண்மையான உற்பத்தியாளர்களை அமுக்கித் தேய்த்துக்கொண்டிருக்கும்போது, தொழிலுற்பத்தியும் தொழில் நுணுக்கமும் வளர்ச்சி குன்றிய மட்ட நிலையில் இருக்கும்போது, கணக்கு வழக்கில்லாத வகையில் மனித உழைப்பு சக்தி வியர்த்தமாகும்போது, நமது விவசாயப் பிரச்சினையை முதலாளித்துவ வழிகளின் மூலமாக அபிவிருத்தி செய்துவிடலாம் என்று நினைப்பது தன்னைத்தான் ஏமாற்றிக்கொள்வதென்பதைத் தவிர வேறல்ல. அல்லது காலக்கிரமத்திலோ படிப்படியாகவோ, விஞ்ஞான முறைகள் மூலமாகவும், அபிவிருத்தி செய்யப்பட்ட பாசன வசதி மூலமாகவும், பொறுக்குவிதை, உரம் கடன் வசதிகள் கொடுப்பதன் மூலமாகவும், அதிக கவனம் செலுத்தி இன்றைய இந்திய விவசாய நெருக்கடியைத் தீர்த்துவிட முடியுமென்று

சொல்லமுடியாது. இப்படிச் சொல்வதானது இந்திய விவசாய நெருக்கடியின் பிரதான குண விசேஷத்தைப் புரிந்துகொள்ளாத தன்மைதான். இந்தப் பிரச்சினை ஒரு தொழில் நுணுக்கப் பிரச்சினையல்ல. அது வர்க்க உறவுகள் பற்றிய பிரதானப் பிரச்சினை. பூர்ணமான அளவுக்கு உற்பத்தி சக்திகளைக் கட்டவிழ்த்து விட்டு பூரா அமைப்பையும் விறுவிறுப்படையச் செய்யும் வகையில், போதிய சமூக பொருளாதார அடிப்படை மாற்றங்கள் தேவைப்படுகிற ஒரு பிரதானப் பிரச்சினையாகும்.

## காங்கிரஸ் கொள்கையினின்றும் மாறுபாடு

ஆகவே கம்யூனிஸ்டு கட்சி ஆளும் பூர்ஷ்வா வர்க்கத்தினால் கையாளப்படும் வர்க்கக் கொள்கைகளிலிருந்து அடிப்படையாகவே மாறுபட்டு நிற்கவேண்டும். ஆளும் பூர்ஷ்வாக்களின் கொள்கைகள் கிராமப் புறப்பொருளாதாரத்தை முதலாளித்துவ நலன்களுக்கு மேலும் மேலும் உட்பட்டு இயங்கச் செய்கிறது. அத்த முதலாளித்துவ சக்திகள் நிலப்பிரபுத்துவ வர்க்கங்களோடு சமரசம் செய்துகொண்டு சலுகைகள் அளிக்கின்றன, சாதாரண விவசாயிகளின்மீது பிரம்மாண்டமான பளுவைச்சுமத்தி அவர்களைப் பட்டினிபோட்டு, விவசாய அபிவிருத்தி என்பதன் பெயரால் மிகப் பெரிய தேசிய வசதி வாய்ப்புக்களை வீணாக்குகின்றன.

காங்கிரஸ் கொள்கைகளின் வர்க்க அடிப்படைத் தன்மையைப் புரிந்துகொள்ள முடியாததன் காரணமாக நமது கட்சிக்குள் மேலோட்டமான எண்ணங்களும் சந்தர்ப்பவாத நடைமுறைகளும் வியாபித்துள்ளன. சமீப வருஷங்களில் விவசாய இயக்கத்தின் அடிப்படையான கோரிக்கைகளை ஒதுக்கி விட்டு உடனடி கோரிக்கைகளில் பூரா கவனமும் செலுத்துவதென்ற போக்கு வளர்ந்துள்ளது. விரிவான ஆதரவைத் திரட்டுகிறோம் என்பதின் பெயரால் அடிப்படைக் கோரிக்கைகளை முன் வைப்பதில் தயக்கமேற்படுகிறது. இந்தப்போக்கு விவசாய இயக்கத்தின் மூலக் குறிக்கோளைப் பலஹீனப்படுத்துவதாகவும், அந்த இயக்கம் நொறுங்கிப்போகும் ஆபத்தான நிலைமைக்கும் தவிர்க்க முடியாது கொண்டுவந்து விட்டிருக்கிறது.

இத்துடன் விவசாய அரங்கத்தில் காங்கிரசின் திட்ட சாதனைகளைப்பற்றிய பிரேமைகள் அப்போதைக்கப்போது வளர்ந்துள்ளன; வெகு முக்கியத்துவமடைகின்றன. நிலைமையின் இந்த அம்சம் பூராவாக நம் அணிகளால் கிரஹித்துக் கொள்ளப்படவில்லை. உண்மையில் இந்தப் பிரச்சினைகளின் பேரில் விரிவான பல பகுதியினரைக் கொண்ட கிளர்ச்சியையும் போராட்டங்களையும் அபிவிருத்தி செய்

யாமல், தீவிரமான விவசாய சீர்திருத்தங்களை ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு விவசாய இயக்கம், ஐக்கியத்தையும் பலத்தையும் வேகத்தையும் பெறமுடியாது.

இப்போதுள்ள நில பாத்தியதை அமைப்பில் தீவிரமான மாற்றங்களைக் கொண்டுவந்தாலல்லது, எந்த ஒரு பிரச்சினையையும், தீர்க்கமுடியாதென்பதை பத்து வருஷத்திய கசப்பான அனுபவம் காட்டியுள்ளது. நிலம் திரும்பவும் பிரித்துக் கொடுக்கப் பட்டாலல்லது, கோடிக்கணக்கான சிறு விவசாயிகளுக்கும் மத்தியதர விவசாயிகளுக்கும் நிலபாத்தியதை உரிமை வழங்கப் பட்டாலல்லது இவர்கள் வியாபாரச் சூதாட்டச் சுரண்டலிலிருந்து விடுவிக்கப்பட்டாலன்றி, ஏறிக்கொண்டுவரும் கடன், குத்தகை வாரம், வரிகளிலிருந்து விடுதலை அளிக்கப்பட்டாலன்றி, பெரிய அளவுக்கு தீவிர சாகுபடியை அபிவிருத்தி செய்ய வாய்ப்பு வசதிகளைச் செய்துகொடுத்தாலன்றி, உணவு நெருக்கடிக்கு சாசுவதமான பரிகாரம் வேறொன்றும் கிடையாது.

அதைப்போலவே பெரும் ஜனத்திரளான சாதாரண விவசாயிகளது வாங்கும் சக்தியை அதிகரித்து ஒட்டுமொத்தமான பொருளாதார சக்தியைப் பலப்படுத்துவது என்ற பிரச்சினை சிறிய நீர்ப்பாசன திட்டங்களை அபிவிருத்தி செய்வது அல்லது தற்போதுள்ள பாசன வசதி பூராவையும் பயன் படுத்துவது என்ற பிரச்சினையுடன் நெருங்கிய தொடர்புள்ள பிரச்சினையாகும். நவீன சாதனங்களைப் பயன்படுத்துவதும் உற்பத்தியைப் பெருக்க விஞ்ஞான வழிகளைக் கையாளுவதும் இதே அடிப்படையைக் கொண்டதுதான்.

### கேந்திரக் கோரிக்கைகள்

ஆகவே கட்சி, இயக்கத்தின் அடிப்படைக் கோரிக்கைகளை கூர்மையாக முன்வைத்து அவைகளை அடைவதற்காக அதிகபட்ச அளவிற்கு வெகுஜனங்களைத் திரட்டவேண்டும் சில வருஷங்களுக்கு முன்பாக, தற்செயலாகவும் தொடர்ச்சியாகவும் இரண்டு வருஷம் நல்ல விளைச்சல் இருந்ததினால், ஐந்தாண்டுத் திட்டம் இந்தியப் பொருளாதாரத்தின் விவசாயப் பகுதி அரங்கத்தை குறிப்பிடத் தக்க அளவு பலப்படுத்தி விட்டதாக நம்பப்பட்டது. காங்கிரஸ் பிரசாரத்தின் செல்வாக்குக்கு ஆளாகி நம்முடையகட்சி அங்கத்தினர்களில் ஒரு பகுதி சமுதாயநலத் திட்டம் காரணமாகவும், தேசிய விஸ்தரிப்புத் திட்டம் முதலிய அபிவிருத்தி வேலைகளின் காரணமாகவும் கிராமப்புற வாழ்வில் பெரும் மாறுதல்கள் கொண்டு வந்துவிட்டதாக நம்பத் தலைப்பட்டனர். இத்தகைய

பிரேமைகளில் பெரும்பகுதி, இன்று தகர்ந்துபோய்விட்டது. இன்றைய உணவு நெருக்கடி காங்கிரஸ் திட்டத்தின் அஸ்திவாரமற்ற தன்மையை வெளிப்படுத்திவிட்டது.

இருப்பினும் விவசாய இயக்கத்தின் அடிப்படைத் திட்டத்தோடு பொருத்திப் பார்க்கும் வகையில், அபிவிருத்திகளையும் ஆளும் பூர்ஷ்வாக்களால் கையாளப்படும் ஜனவிரோத வர்க்கக் கொள்கைகளையும் சீர்தூக்கிப் பார்த்து மதிப்புப்போட நமது கட்சி ஊழியர்கள் ஒழுங்காகப் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

## புதிய பிரச்சினைகள்

நமது தேசத்தின் விவசாய இயக்கத்தில் நிலப் பிரச்சினைதான் இன்னும் அடிப்படையான பிரச்சினையாக இருந்து வருகிறது. இருந்த போதிலும் தற்போதைய மாறுபட்ட சூழ்நிலையில் ஏகபோக முதலாளித்துவ சுரண்டலுக்கு கிராமப் பொருளாதாரம் மென்மேலும் உட்படுத்தப் படும்போது, அடிப்படைப் பிரச்சினையான நிலப்பிரச்சினையோடு, கிராமக் கடன், வரிகள், சமனமில்லாத பரிவர்த்தனை விகிதம், விலைவாசி முதலியவைகளும் இவைகளுடன் சம்பந்தப்பட்ட இதரப் பிரச்சினைகளும் இந்தக் காலகட்டத்தில் கீழ்காணும் கோரிக்கைகள் விவசாய இயக்கத்தின் கேந்திரக் கோரிக்கைகளாகும்.

1. இன்றைக்கு நிலத்தை வைத்துக்கொண்டிருக்கும் பாத்தியதை அடிப்படையைக் கணக்கிலெடுத்துக் கொள்ளாது சகல உழுதுபயிரிடும் குடியானவனுக்கும் சொந்தவுரிமை பாத்தியதை வழங்குதல். சிறுநிலச் சொந்தக்காரர்களுக்கு வெகுவாக மட்டுப் படுத்தப்பட்ட நிலமீட்சி உரிமை. வாரச் சாகுபடிதார்களுக்கு நில வெளியேற்றத்திலிருந்து பூரணப் பாதுகாப்பு.

2. மலைத் தோட்டங்கள் நீங்கலாக எந்தவித விதிவிலக்குமின்றி சகல விவசாயிகளின் நில உடமைக்கும் வரம்புகட்டுதல். வரம்புபோக மீதம் உள்ள உபரி நிலங்களை வெளியேற்றப்பட்ட சாகுபடிதாரர்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் ஏழை விவசாயிகளுக்கும் விநியோகம் செய்வது.

3. சகல சாகுபடிக்கு லாயக்கான தரிசு நிலங்களையும் விவசாயத் தொழிலாளிகளுக்கும் ஏழை விவசாயிகளுக்கும் இனமாகப் பகிர்ந்து கொடுத்தல்.

4. ஏழைப் பகுதிகள் மீதுள்ள வரிச்சுமைகள் கணிசமாகக் குறைக்கப்படும் வகையில் வரிவிதிக்கும் அமைப்பை மாற்றி அமைத்தல்.

5. துரிதமான அரசாங்க வியாபார விஸ்தரிப்பின் மூலமாகவும் விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு நியாயவிலை உத்தரவாதமளிப்பதன் மூலமாகவும், உணவு தான்யங்கள், விவசாய மூலப் பொருள்கள் இவைகள் மீதுள்ள ஏகபோக வியாபார நலன்களைத் தகர்த்தல்.

6. கொள்ளையடிக்கும் தன்மை கொண்ட கடன்களிலிருந்து விவசாயிகளை மீட்பது. போதுமான மலிவுக்கடன், அரசாங்கம், கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் கிடைக்க வசதி செய்தல்.

7. விவசாயத் தொழிலாளிகளுக்கு குறைந்தபட்சக் கூலி விகிதங்கள் நிர்ணயித்தல், வேலை கிடைக்க வசதிசெய்தல்.

8. கிராமப்புற நிர்வாக இயந்திரத்தை ஜனநாயகப் படுத்துதல். இந்தக் கோரிக்கைகள் கட்சியின் விவசாயத் திட்டத்தில் இன்றுள்ள கேந்திரத் தன்மை வாய்ந்த அம்சங்களாகக் கொள்ள வேண்டும்.

துரிதமான தொழில் வளர்ச்சித் திட்டத்தையும் கூடவே மேற்கொண்டாலல்லது இந்த சீர்திருத்தங்கள் மட்டும் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், நிலத்தின் மீதுள்ள மிக அதிகமான கிராக்கி, முதலிய பிரச்சினையைத் தீர்க்க முடியாதென்பதை உணர வேண்டும். பூரா இந்திய மக்களது, இடைவிடாத துரிதமான தேசத்தின் தொழில் வளர்ச்சி, என்ற ஜனநாயகக் கோரிக்கைக்காக விவசாயிகளை ஒன்று திரட்டும் முக்கியத்துவம் இதிலிருந்து எழுகிறது.

## போராட்டத்தின் திசை

முரண்பட்ட நில உறவு பாத்தியதைகள், சரி சமனில்லாத வளர்ச்சி, இத்தகைய சிக்கலான நிலமையின் கீழ் விவசாயப் போராட்டங்களின் திசை வழியையும், இந்தப் போராட்டங்கள் வளரவேண்டிய அடிப்படையில் அதற்கான வர்க்கங்களின் சேர்க்கையையும் நாம் தீர்மானிக்கவேண்டும்.

இந்தப் போராட்டங்களின் கூர்முனை அரசாங்கக் கொள்கைகளுக் கெதிராக பகிரங்கமாக திருப்பிவிடப்படவேண்டும். ஏனெனில் இந்தக் கொள்கைகள்தான் நிலப்பிரபுத்துவ நிலச்சுவான்களை முதலாளித்துவ நிலச்சுவான்களாக மாற்றும் கொள்வதற்கு உதவிசெய்கிறது, கிராமப்புறப் பொருளாதாரத்தை மேலும் மேலும் முதலாளித்துவச் சுரண்டல்காரர்களது பிடிப்புக் குள்ளே வீழ்த்துகிறது. விவசாய மார்க்கெட்டின் மீது ஏகபோக நலன்களுடையவர்களது பிடிப்பை இறுக்குவதற்கு உதவுகிறது.

பல லட்சக்கணக்கான சாகுபடிதார்களை ஏதுமற்ற பஞ்சைகளாக்கியதும், விவசாய வெகுஜனங்கள் மீது சகிக்க முடியாத சுமைகளை வீசிக்கொண்டிருப்பதும் இதே கொள்கைகள்தான். ஆகவே இந்தக் கொள்கைகளை எதிர்த்துப் போராடித் தோற்கடிக்கவேண்டும்.

இந்தக் காலகட்டத்தில் விவசாயப் போராட்டங்கள் நிலப்பிரபுத்துவ அமைப்பின் மிச்சசொச்சங்கள் மீது மட்டுமல்ல கிராம வாழ்விலுள்ள சில முதலாளித்துவ சக்திகள் மீதும் உருவாக்கப்படவேண்டும். இந்தப் போராட்டங்கள் ஒரே சமயத்தில் மிச்ச சொச்ச நிலப்பிரபுத்துவச் சுரண்டலுக்கெதிராகவும், விவசாயப் பொருளாதாரத்தின் மீது முதலாளித்துவ நிலச்சுவான்கள், பெரும் வியாபாரிகள் வியாபாரச் சூதாடிகள் முதலியோரது வளர்ந்துவரும் அசுரப்பிடிப்பை எதிர்த்தும் வளர்ந்துவரும். சில இடங்களில் இந்த இரண்டு போராட்டங்களும் ஒன்றோடொன்று பிணைந்துநிற்கும் இயல்பும் ஏற்படும்.

சம்பந்தப்பட்ட பிரச்சினையின் இயல்புக்கேற்றவாறும் சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் இருக்கும் வர்க்க உறவுகளில் மேலோங்கிநிற்கும் தன்மைக்கேற்றவாறும் அவைகளினடிப்படையில் சிக்கலான வர்க்க சேர்க்கைகளைக் கொண்ட ஒரு மாதிரியான விளைவு எழும். ஆகவே அகில இந்திய ரீதியில், கிராமப்புறத்தில் பிரதான வர்க்க எதிரி, யார் என்று பொதுமைப்படுத்துவது வீண் காரியம். ஏனெனில் விவசாயத்தின் தாரதம்யமான பொருளாதார வளர்ச்சிக் காரணமாக ராஜ்யத்துக்கு ராஜ்யம் நிலைமை பெருமளவுக்கு மாறுபடுகிறது. இருப்பினும் நிலப்பிரபுத்துவத்துக்கெதிராக சகல விவசாயிகளின் ஒறறுமை என்ற பழைய கோஷம் தேசரீதியான அடிப்படையில் விவசாய இயக்கத்தின் மத்திய கேந்திர கோஷமாக இனியும் கொள்ளமுடியாது என்று திட்டவட்டமாய் சொல்ல முடியும். இருப்பினும் நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்சங்கள் இன்னும் பலமாக உள்ள சில பின் தங்கிய இடங்களில் இந்த கோஷம் அமுலாகக் கூடியதுதான்.

கட்சியின் தலைமையில் நடக்கும் விவசாயப் போராட்டங்களும் இயக்கங்களும் எல்லா நிலைமைகளின் கீழும் ஏழை விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்களது ஒற்றுமையையும், மத்திய விவசாயிகளுடன் உறுதியான நேசத்தையும் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். இந்த அமைப்பின் கீழ் மத்திய விவசாயிகளுடைய முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடுவதானது இயக்கத்துக்குப் பெருமளவுக்கு பலஹீனம் ஏற்படுத்தும். மத்திய விவசாயி எந்த நிலைமையின்கீழும் எதிரியின் பக்கம் போகும்படி விட்டுவிடக்கூடாது; அவனுடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தம், நிரந்

தரமான உடைக்க முடியாத பிணைப்பாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

**பணக்கார விவசாயி**

பணக்கார விவசாயியின் பாத்திரம் பற்றி இந்தக் கால கட்டத்தில் மீண்டும் புனர் மதிப்பிடப்பட வேண்டும். அரைகுறை நிலப் புத்துவம் ஒழிக்கப்பட்டதாலும், கிராமப் பகுதிகளில் முதலாளித்துவ உறவுகள் விரிவடைவதன் காரணத்தாலும், பணக்கார விவசாயி இதுவரையில் அவனுக்குக் கிடைத்திராத அந்தஸ்தைப் பெறுகிறான். தற்போதைய ஆட்சி நிர்வாகத்தினரால் ஆதாயமடைபவர்களுள் அவனும் சிறு ஆதாயமடையும் ஒருவன். கிராமப்புறங்களில் காங்கிரசின் பிரதான சமூக தளமாக பணக்கார விவசாயி ஆளாகிறான். இப்படி அவன் இருப்பதன் காரணமாக விவசாய இயக்கம் வளர்க்கப்படுவதற்கான அடிப்படை வர்க்கச் சேர்க்கையில் ஒரு பகுதியாக, அவனை நடத்த முடியாது. ஏனெனில் இயக்கத்தின் சில அடிப்படையான கோரிக்கைகளை அவன் இயல்பாகவே எதிர்க்கவேண்டி வரும். உதாரணமாக நிலத்துக்கு வரம்பு கட்டுவது, தரிசுநிலத்தை இனமாக வினியோகித்தல், பாடுபடும்விவசாயிக்கு நில பாத்திய உரிமை அளித்தல், முதலிய கோரிக்கைகளை இயல்பாகவே அவன் எதிர்க்க வேண்டி வரும். தற்போதுள்ள அபிவிருத்திச் செல்வு முறையில், இதர ஏழை மக்கள் பகுதிக்கு சாதகமான வகையில் ஏற்படுத்தும் எந்தப் பெரிய மாற்றத்தையும் கூட, அவன் எதிர்ப்பான். ஏனெனில் இந்த நடவடிக்கை அவனுடைய சொந்த ஆதாயங்களைக் குறைத்து விடும். அவனே சிறு உபரியை உடைய சிறியதொரு சேமிப்பாளனுக இருப்பதன் காரணமாக, உணவு தான்ய வியாபாரத்தை அரசாங்கம் நடத்துவது, பணவீக்க நிலைமைகளின் கீழ் உணவு தான்யக் கொள்முதல், அல்லது உணவு தான்ய விலை கட்டுப்பாடு முதலிய நடவடிக்கைகளை இயற்கையாகவே அவன் எதிர்க்கவேண்டி வரும்.

இருப்பினும்கூட தற்போதைய விவசாய அமைப்பின் கீழ் அவனை ஒரு வர்க்க எதிரியாகப் பாவிப்பது தவறாகும். ஏனென்றால் மேலே சொல்லப்பட்ட பிரச்சினைகள் பலவற்றில் அவனை சரிக்கட்டி நடுநிலைமை வகிக்கச் செய்வது சாத்தியமேயாகும். உதாரணமாக, உற்பத்தியாளனுக்கு நியாயவிலை, பாசனவசதிகள் விஸ்தரிப்பது, சிலதரப்பட்ட வரிகளைக் குறைப்பது, கிராமப் புறங்களில் பொதுவான கலாசார வளர்ச்சி, நிர்வாக இயந்திரத்தை ஜனநாயகப் படுத்துவது போன்ற பல பிரச்சினைகளில் அவனை ஒரு நேச சக்தியாகக்கூடக் கொண்டுவர முடியும். அவனை நேரடியாகப் பாதிக்காத பிரச்சினைகளில், பெரும் நிலச்சுவான்களுக்கு எதிராகத்-

திருப்பிவிடப்பட்ட போராட்டங்களின் விஷயத்தில், அவனுடைய ஆதரவைப் பெற முடியும். நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்சங்கள் இன்னும் பலமாக இருக்கக்கூடிய இடங்களில், நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்சங்கள் இன்னும் பலமாக இருக்கக்கூடிய இடங்களில், நிலப்பிரபுத்துவ சுரண்டலுக் கெதிரான வெகுஜன இயக்கங்களில் பணக்கார விவசாயியின் ஆதரவையும் அனுதாபத்தையும் பெறுவதற்கு முயற்சிகளெடுத்துக்கொள்ளவேண்டும். விலைவாசி ஏற்றம் இறக்கம் காரணமாகவும், விவசாய மார்க்கெட்டில் ஏகபோக வியாபார நலன்களது ஆதிக்கம் காரணமாகவும், பணக்கார விவசாயியும் கஷ்டப்படுகிறான் என்பது கவனிக்கத்தக்கது. இத்தியாதி காரணங்களால் அவன்பால் நமது கண்ணோட்டம் சாத்தியமான அளவு எவ்வளவு பிரச்சினைகளில் அவனுடன் அப்போதைக்கப்போது சீர்தூக்கிப் பார்த்து நேசப் பான்மை கொள்வது என்பதாக இருக்க வேண்டும்.

### விவசாயத் தொழிலாளர்கள்

கிராமப்புறங்களில் ஏழ்மைத் தன்மை வளர்ந்துவருவது காரணமாகவும், முதலாளித்துவ உறவுகள் விரிவடைவதன் காரணமாகவும், விவசாயத் தொழிலாளர்களை ஒன்றுதிரட்டும் பிரச்சினை அதிகப்படியான முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கிறது. விவசாய இயக்கத்தில் புதியதொரு தன்மையை ஏற்படுத்தியிருக்கிறது. ஏனெனில் விவசாயத் தொழிலாளர்கள் நிலப்பிரபுத்துவத்தின் மிச்சசொச்சங்களை உறுதியாகவும் தொடர்ச்சியாகவும் எதிர்த்துப் போராடும் சக்தியாக மட்டுமல்ல, விவசாயத் துறையில் வளர்ந்து வரும் முதலாளித்துவச் சுரண்டலுக்கெதிரான போராட்டத்திலும் தலைமை தாங்கும் சக்தியுமாகும். கிராம ஜனத்தொகையின் மிகப் பெரிய இந்த வெகுஜனப் பகுதி தீவிரமான வகையில் உள்ளே கொண்டுவரப்படாவிட்டால் விவசாய இயக்கம் பலஹீனமாய்த் தானிருக்கும் என்பது வெளிப்படை. குறிப்பாக ஜனத்தொகையில் பெரிய சதவிகிதத்தினராயிருக்கும் பிராந்தியங்களிலும், எங்கு வர்க்கவித்தியாசங்கள் தெளிவாகத் தென்படுகிறதோ அங்கும், விவசாயத் தொழிலாளர்கள் விவசாய இயக்கத்தில் முக்கிய பங்கெடுத்துக்கொண்டாலல்லாது விவசாய இயக்கத்தைப் பலப்படுத்த முடியாது.

கிராமப் பகுதி மக்களிடையே நடத்தும் கட்சியின் வேலையில் மிகப் பெரிய பலஹீனங்களிலொன்று விவசாயத் தொழிலாளர்களை ஸ்தாபன ரீதியாக ஒன்று திரட்டவும், அவர்களது எல்லையில்லாத சக்திகளை அடிப்படையான விவசாய சீர்திருத்தங்களுக்காகத்

தட்டி எழுப்பிப் பயன்படுத்தவும் தவறியதுதான் என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். ராஜ்ய அடிப்படையில் விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் ஆந்திரா, பஞ்சாப், பீஹார் முதலிய இடங்களில்தான் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டிலும், கேரளாவிலும் சில ஜில்லா சங்கங்கள் இருக்கின்றன. ஆனல் இவைகளில் பெரும்பான்மையானவை பலஹீனமாகவும், கிட்டத் தட்ட செயலற்ற ஸ்தாபனங்களாகவும் தானிருக்கின்றன. நில உடமைக்கு வரம்பு, தரிசுநில விநியோகம், நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்ச ஒழிப்பு, கடன் குறைப்பு, வரிச்சுமை முதலிய கேந்திரப் பிரச்சினைகளுக்கான போராட்டங்களில், பொதுப்படையான நட வடிக்கைகளில், ஏழை விவசாயப் பொதுமக்களோடு விவசாயத் தொழிலாளர்கள் ஒன்றுபட்டு நிற்காவிட்டால் அந்தப் போராட் டங்கள் அலைமோதி வளர்ந்து தீவிரப்படமுடியாது என்பது வெளிப்படை.

ஆகவே, தேச ரீதியாக திட்டமிட்டு ஸ்தாபன ரீதியான வகை யில் விவசாய இயக்கத்துக்குள்ளே விவசாயத் தொழிலாளர்களை கொண்டு வருவதற்கு உறுதியோடு கூடிய முயற்சிகள் எடுக்கப் படவேண்டியது தவிர்க்க முடியாததாகிறது. எங்கெங்கு விவசா யத் தொழிலாளர்கள் பெரும்பகுதி எண்ணிக்கையாகக் காணப்படு கிறார்களோ, எங்கெங்கே அவர்கள் தனியானதொரு வர்க்கமாக வெளிவந்துள்ளனரோ அங்கெல்லாம் அவர்களை தனியாக விவ சாயத் தொழிலாளர் சங்கமாக ஸ்தாபிக்கப்பட வேண்டும். அந்த சங்கங்கள் தொழிற் சங்கச் சட்டப்படி பதிவு செய்யப்பட வேண் டும். அத்தகைய தனி சங்கங்கள் எங்கெங்கு அமைக்கப்படு கிறதோ அங்கெல்லாம் விவசாய சங்கத்தோடு எல்லா மட்டங்களி லும் இணைப்புக் கமிட்டிகள், பரஸ்பர ஆலோசனைகளுக்காகவும், பொதுவான கோரிக்கைத் திட்டங்களை வகுத்துக்கொள்வதற்காக வும் அமைக்கப்பட வேண்டும்.

அகில இந்திய மட்டத்தில் விவசாயத் தொழிலாளர் சங்கங் கள் அகில இந்திய விவசாய சங்கத்துடன் இணைக்கப்படலாம். எங்கெங்கு விவசாயத் தொழிலாளர்கள் ஒரு பெரிய வர்க்கமாக வெளிவரவில்லையோ, நிலப்பிரபுத்துவ மிச்சசொச்சங்கள் இன்னும் பலமாயும், வாரச் சாகுபடிமுறை பெரிய அளவுக்கு நடைமுறையி லிருக்கும் பகுதிகளிலிருப்பதைப் போன்று எங்கெங்கு விவசாயத் தொழிலாளர்கள் ஒரு பெரிய வர்க்கமாக வரவில்லையோ, எங் கெங்கு மற்ற வெகுஜனப் பகுதியாகிய ஏழை விவசாயிகளிட மிருந்து சுலபமாக பிரித்துக் காணக்கூடிய நிலமையில் விவசாயத் தொழிலாளர் இல்லையோ அங்கெல்லாம் அவர்களைப் பெரிய அள

; விவசாய சங்கங்களுக்குள்ளேயே கொண்டுவரப்பட வேண் எப்படி யிருந்தாலும் விவசாயத் தொழிலாளர்களது நலன் க்காக தேசம் பூராவிலும் விவசாய சங்கங்கள் வரிந்துகட்டிக் காண்டு நிற்கவேண்டும். பொதுவான போராட்டங்களில் ஏழை மத்யதர விவசாயிகளுடன், விவசாயத் தொழிலாளர்களது ஒற்று மையைக் கட்டுவதில் சகல முயற்சிகளையும் கையாள வேண்டும்.

விவசாயப் பொதுமக்களின் பொதுவான கோரிக்கைகளோடு விவசாயத் தொழிலாளர்களது கீழ்க்கண்ட கோரிக்கைகளைத் துணி வோடு முன்வைத்துப் போராடியாக வேண்டும். (1) குறைந்த கூலி. சட்டப் பிரகாரம் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம்—நிர்ணயத்துக்கு மேற்பட்ட வேலைநேரத்துக்கு, உபரிநேர வேலைசம்பள விகிதம், (2) இனமாக குடியிருப்பு மனை, (3) ஸ்தல வேலைகளில் கூட்டுறவு உழைப்பு சங்கங்களுக்கு சலுகை, (4) சாகுபடிகாலம் முடிந்தபின் இதர பருவங்களில் வேலைகொடுக்கும் வழிவகை. (5) சமூகக் கொடுமை, கடன்பட்ட அடிமைத்தனம் கொத்தடிமைத்தனம் ஒழிப்பு.

## பரஸ்பரம் விட்டுக்கொடுத்து சரிக்கட்டிக் கொள்வதற்கான அவசியம்

விவசாயிகள் மத்தியில் வெகுஜன இயக்கங்களைக் கட்டும் போது, விவசாயிகள் ஒன்றுபட்ட ஒரு வர்க்கமல்ல என்பதை மன தில் கொள்ளவேண்டும். அவர்களிடையே பல பகுதிகளும், பகு திக்குப் பகுதி முரண்பாடுகளும் உள்ளன. ஏழை விவசாயிகள் விவசாயத் தொழிலாளிகளிடையேயும் முரண்பாடுகள் உள்ளன. இயக்கத்தின் பலாபலத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த முரண்பாடுகள் தீர்க்கப்பட வேண்டும், அல்லது பரஸ்பரம் சரிக் கட்டுவதன்மூலம் எல்லைக்குட்பட்டு நிற்கும்படி செய்யவேண்டும். சிறுநிலக்காரர்கள் நலன்களுக்கும் சாகுபடிதார்களுடைய நலன் களுக்கு மிடையே உள்ள முரண்பாடுகள் தீர்ப்பதென்பது மிகக் கடினமானது. கிராமவாழ்வில் சிறு நிலக்காரர்களது அந்தஸ்து முக்கியத்தன்மை கொண்டது. அவர்களது போக்கு விவசாய இயக் கத்தை பலவிதங்களில் பாதிக்கும். இந்த நலன்களைப் பொறுத்த வரையில் பரஸ்பரம் விட்டுக்கொடுத்து சரிக்கட்டும் அவசியத்தை உணராததன் காரணமாக சென்ற காலத்தில் இயக்கத்துக்குக் கடு மையான கஷ்டநஷ்டங்கள் ஏற்பட்டுள்ளன.

## விவசாயிகளின் அபிலாஷைகள்

இந்தக் காலகட்டத்தில் சக்தி வாய்ந்த விவசாயிகள் இயக் கத்தை அபிவிருத்தி செய்வதற்கு மட்டற்ற வாய்ப்புக்கள் உள்ளன

இன்றைய அரசாங்கத்தின் விவசாயக் கொள்கைகளின் பேரில் அதிருப்தி வளர்ந்துகொண்டு வருவதும், பொதுவாக ஜனநாயகஉணர்வு வளர்ந்து வருவதுமான காலகட்டம் இது. நிலவெளியேற்றம், அதிகமாகிக்கொண்டு வரும் வரிகள், தரிசு நில வினியோகம், நிலத்துக்கு வரம்பு கட்டுவது, உபரி நிலங்களைப் பிரித்து வினியோகம் போலீஸ் அடக்குமுறை முதலிய பிரச்சனைகளுக்கான பலதரப்பட்ட போராட்டங்களிலிருந்து நாகரீக வாழ்க்கைக்கவசியமான சமுதாயக் கலாச்சார வசதிகளுக்கான போராட்டங்கள் வரையில், கிராமப்புறத்து மக்கள் பெரிய அளவுக்கு பங்கெடுக்க முன் வந்துள்ளனர். இத்தகைய நிலைமைகளின் கீழ் விவசாய சங்கங்கள் விவசாயப் பொதுமக்களின் எல்லாஜனநாயக அபிலாஷைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்வதற்கான சக்தி வாய்ந்த கருவிகளாகச் செயல்பட வேண்டும்.

சுதந்திரம் கிடைத்த பின்னுள்ள காலகட்டத்தில் இந்திய மக்களது மிகப்பெரிய அபிலாஷை தேசியப் புனருத்தாரன அபிலாஷைதான். இந்த அபிலாஷை நகரப்பகுதி சமுதாயத்தைவிட, அதிகம் ஏகாதிபத்திய சுரண்டல் சீர்குலைவுகளை அனுபவித்த கிராம சமூகத்துக்குத்தான் அதிக அழுத்தமாக இருக்கிறது. பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள், சாலைகள் திறப்பது, ரோடுகள் போடுவது, நல்ல கிணறுகள் வெட்டுவது, மின்சார விளக்கு, சுத்தமான குடி தண்ணீர் வசதி, நல்ல வீட்டு வசதி முதலிய வாழ்க்கை வசதிகளுக்காக கிராம மக்கள் பூராவும் துடித்துக்கொண்டு நிற்கின்றனர். அதே சமயம் விவசாயிகளிடையே விவசாயப் பழக்கங்களை அபிவிருத்தி செய்து உற்பத்தியைப் பெருக்கவும் உள்ளத் துடிப்பு ஏற்பட்டுள்ளது. உற்பத்தியைப் பெருக்க உதவும் வழிகளிலும் திட்டங்களிலும் எல்லாப் பகுதி விவசாயிகளும் காட்டும் தீவிரமான அக்கரையில் இந்த உள்ளத் துடிப்பைக் காணலாம்.

கடன் வசதி, விற்பனை, உழைப்பு சேகரம், பண்ணை நடத்துதல் முதலியவைகளுக்கும், இதர இது போன்றவைகளுக்கும் ஏற்பாடு செய்வதற்கான கூட்டுறவு ஸ்தாபனங்கள் அமைப்பது என்பது உழுது பயிரிடுபவர்களது நலன்களைப் பாதுகாப்பதில் முக்கியமான பாத்திரம் வகிக்க முடியும். ஆனால், அரசாங்கத்தின் கொள்கைகள் உண்மையான கூட்டுறவு ஸ்தாபனங்கள் வளர்வதற்கான பாதையில் மிகப் பெரிய முட்டுக்கட்டையாக உள்ளன. இன்றுள்ள கூட்டுறவு ஸ்தாபனங்களும்கூட இன்று உள்ள ஜனநாயக இயங்கும் தன்மையையும் கடுமையாகப் பாதிக்கப்படும் வகையில்தான் புனர்நிர்மாணம் செய்யப்படுகின்றன. விவசாய இயக்கம் இந்தக் கொள்கைகளுக்கெதிராகவும், கூட்டுறவு ஸ்தாபனங்களை ஜன

நாயகப் படுத்துவதற்காகவும், அவைகளுக்குப் போதிய வசதிகளை ஒதுக்கும்படியும் போராட வேண்டும். அதே சமயத்தில் பலதரப்பட்ட கூட்டுறவு ஸ்தாபனங்களை ஏற்படுத்தவும் அவைகளை நடத்தவும் விவசாய சங்கம் முன்கையெடுக்க வேண்டும்.

சென்ற காலத்தில் கட்சியானது சமூக பொருளாதார புனருத்தாரணத்துக்கான பொதுமக்களது உள்ளத் துடிப்பின் பலத்தைக் குறைத்து மதிப்பிட்டது. ஆகவே ஆந்திரா, கேரளா போன்ற சில ராஜ்யங்களைத் தவிர வேறெங்கும் விவசாய ஸ்தாபனங்கள், சமுதாய அபிவிருத்தித்திட்டங்கள், தேசீய அபிவிருத்தி, கூட்டறவு ஸ்தாபனங்கள் முதலிய கிராம அபிவிருத்தித் திட்டங்களுக்குப் போதிய கவனம் செலுத்தவில்லை, இந்தப் போக்கு விவசாய ஸ்தாபனங்களை கிராமங்களில் தங்கள் தளங்களை விஸ்தரிக் முடியாதபடியும் விவசாயிகள் அன்றாட வாழ்வுடன் தங்களதுதொடர்புகளை பலப்படுத்திக்கொள்ள முடியாதபடியும் தடுத்துவிட்டது.

அமிர்தசரஸ் கட்சிக் காங்கிரஸ் தீர்மானம் கூறுவதாவது "கல்வி, கலாசாரம், சுகாதாரம் முதலிய ஒவ்வொரு அரங்கிலும் தேசியப் புனருத்தாரணத்துக்கான உள்ளத் துடிப்புக்கு நாம் உருக்கொடுப்பதற்கு முயலுவோம்." 'இந்தப் பிரகடனத்தைப் பொறுப்புடன் எடுத்துக்கொள்வதானுல் விவசாய ஸ்தாபனங்கள் இந்த புனருத்தாரண நடவடிக்கைகளில் இத்திட்டங்களின் காரணமாக ஏற்படும் நன்மை ஒரு எல்லைக் குட்பட்டதென்பதையும் உணர்ந்து, தீவிரமாகத் தலையிட்டு பங்கெடுத்துக் கொள்ளவேண்டும். அப்போதுதான் லஞ்சம், சேதாரம் முதலியவைகளைத் தடுக்கப் பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். திட்டத்தின் பூராமதிப்புத் தொகையையும் ஒழுங்காய் செலவழிக்க முடியும். திட்டங்களினுல் ஏற்படும் ஆதாயம் பெரிய அளவுக்கு ஜனத் தொகையின் பெரும் பகுதியான ஏழைகளுக்குப் போகும்படி செய்ய முடியும்.

தேசத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான வெகுஜனப் பிரசார இயக்கத்தைக் கட்டும் கடமையையும் விவசாயிகள் ஸ்தாபனம் சுறுசுறுப்புடனும் விறுவிறுப்புடனும் மேற்கொள்ள வேண்டும். அரசாங்கத்தின் சகல உணவு உற்பத்திப் பெருக்கு இயக்கங்களிலும் பரிணமித்துள்ள அதிகார வர்க்கத்து முறை, திறமைக் குறைவு, லஞ்சம், முதலியவைகளை எதிர்த்துப் போராடுவதோடு நில்லாமல், வெகுஜன செல்வாக்குள்ள திட்டங்களை வகுப்பதிலும் அவைகளை உத்தியோக பூர்வமாகவும், தனிப்பட்ட முயற்சிகள் மூலமாகவும் அமுல் நடத்தப்படுவதற்கும் முன்கை யெடுக்க

வேண்டும். விவசாய ஸ்தாபனங்கள் இந்த விஷயத்தில் சாதாரண விவசாயிகளுக்குப் போதிய சலுகைகளையும் உதவியையும் கிடைக்கச் செய்ய வழி வகைகளைத்தேடி, உணவு உற்பத்தியில் வெகுஜன உற்சாகத்தைத் தட்டிக் கிளப்பவேண்டும். இவைகளெல்லாம் உணவு நெருக்கடியைத் தணிப்பதற்கும் விவசாய ஸ்தாபனங்களுக்கு ஒரு அகண்ட தேசாபிமான அடிப்படையை ஏற்படுத்தவும், விவசாயிகள் வாழ்வில் இயக்கம் வேரூன்றவும் உதவி செய்யும்.

## வளரும் போராட்ட அலை

இருப்பினும், விவசாய சங்கங்களின் வேலையை, அரசாங்கத் திட்டங்களில் பங்குகொள்ளுவது, தலையிடுவது என்ற வேலையுடன் நிற்கும்போக்குக் கெதிராகவும் ஒரு எச்சரிக்கை விடுவது அவசியமாகிறது. இத்தகைய நடைமுறையை அன்ருட "ஆக்கபூர்வமான வேலை" என்று அழைத்துக் கொள்கிருர்கள். விவசாய சங்கம் விவசாயிகளது போராடும் வன்மையான வர்க்க ஸ்தாபனம் என்பது தெளிவாக ஞாபகத்திலிருக்க வேண்டும். அதன் நோக்கம் விவசாயப் பொதுமக்களை ஸ்தாபனப்படுத்தி, ஒன்றுதிரட்டி, ஒற்றுமைப் படுத்தி, அடிப்படை விவசாய சீர்திருத்தங்களுக்கான போராட்டத் துக்குத் தலைமை தாங்குவதாகும். இந்தப் போராட்டங்களின் போது விவசாய சங்கம் விவசாயிகளின் கணக்கற்ற வெகுஜன நடவடிக்கைகளை உடனடிக் கோரிக்கைகளுக்காகவும் துண்டு துக்காணிச் சலுகைகளுக்காகவும் உருவாக்கவேண்டி வரும். அந்த நடவடிக்கைகள், அவர்களது போராட்ட குணத்தை வளர்க்கும். பிரசாரத்தின் மூலமும், வெகுஜன இயக்கங்கள், பகுதிப் போராட்டங்கள், சமூக கலாசார சேவைகள், முதலியனமூலமும், சகல ஏழ்மைப்பட்ட சுரண்டப்பட்ட கிராமஜனப்பகுதி பூராவின் ஒற்றுமையையும் உருவாக்கவேண்டும்.

இந்த நடவடிக்கைகளின் மத்திய குறிக்கோள், விவசாயப் பொதுஜனங்களிடை அடிமைத் தளைகளை தகர்த்தெறியவும், சுதந்திரமான சந்தோஷமான விவசாயிகளது வாழ்வைப் புனருத்தாரணம் செய்யவும், தேவையான உள்ளுணர்வு, உறுதிப்பாடு, பலம் இவைகளை சிருஷ்டிப்பதுதான். இந்த மையமான குறிக்கோளைப் பார்க்கத் தவறும் விவசாய இயக்கத்துக்குள்ளிருக்கும் எந்தப் போக்கும் விவசாய ஸ்தாபனங்களை தற்போதைய அரசாங்கத்தினது திட்டங்களுக்கு தொங்கு சதையாக்க மாற்ற முயலும் போக்காகும். இத்தகைய போக்கை எதிர்த்து முறியடித்தாக வேண்டும்.

வரப்போகிற காலம் தேசத்தில் பொருளாதார நெருக்கடி தீவிரப்படப் போகிறகாலம். காங்கிரஸ் திட்டத்தின் தோல்வி, தேசத்தை அத்தகைய நிச்சயமற்ற தன்மையில் இழுத்துச் செல்வது, இவையெல்லாம் மேலும்மேலும் பொருளாதாரச் சுமைகளை சாதாரண மக்களின்மீது சுமத்துவதில் கொண்டுபோய்விடுவதைத் தவிர வேறு வழியில்லை. நமது மக்களுக்குள் விவசாயிகள்தான் எளிதாகத் தாக்கப்படும் பகுதியினராக அமைந்துள்ளனர். பல்வேறு சுரண்டல்களுக்கு ஆளாக்கப்பட்ட அவர்கள் இந்த நெருக்கடிக்கு மோசமான வகையில் பலியாகி உள்ளனர். ஆனால், அதே சமயம் நமது வளர்ந்துவரும் ஜனநாயக இயக்கத்தின் முதுகெலும்பும் அவர்கள்தான். பட்டினியும், கஷ்டமும் நாட்டில் நர்த்தனம் புரிகிற நிலையில் விவசாயக் குடிமக்கள் வாழ்வதற்கான உரிமைக்காகவும், தங்கள் உழைப்பின் பலனைத் தாங்களே அனுபவிப்பதற்காகவும் மேலும் மேலும் நடவடிக்கையில் அவர்கள் ஈடுபடுவது நிச்சயம்.

வரப்போகும் காலகட்டத்தில் தேசம் பூராவிலும் கோடிக் கணக்கான மக்களை ஈடுபடுத்தும் விவசாயப் போராட்டங்களின் வளர்ச்சி அலைமோதுவதைக் காணலாம். இந்தப் போராட்டங்களை வெற்றிக்கு தலைமை தாங்கி, வழிநடத்திச் செல்லும் மகத்தான சரித்திர பூர்வமான கடமைக்காகக் கட்சி தன்னைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும்.

...ாட்வே, சென்னை-1.

# படித்துவிட்டீர்களா ?

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| கம்யூனிஸ்ட் அறைகூவல் | 3 | அணு |
| கம்யூனிஸத்தின் வெற்றி முரசு | 3 | ,, |
| கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பு விதிகள் | 3 | ,, |
| தற்கால அரசியல் நிலைமை | 3 | ,, |
| சர்வதேச அரசியல் நிலைமை | 2 | |
| இரண்டாவது பொதுத்தேர்தல் பரிசீலனை | 4 | ,, |
| ஜனநாயக மொழிக் கொள்கை | 3 | ,, |
| வீர பரம்பரை | 4 | ,, |
| கட்சி ஸ்தாபனக் கடமைகள் | 2 | ,, |
| பாரதியின் தத்துவ ஞானம் | 4 | ,, |
| கேரளத்தில் நடப்பதென்ன ? (மாஜினி) | 4 | ,, |

நியூ செஞ்சுரி

199, மவுண்ட் ரோடு
சென்னை-2

S. M. R. மா
செர்ரி ரோ(